பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 15 வியாழக்கிழமை 31.07.2025 கதிர் 264

## இனிது ரகசியம் அல்ல!

தாங்கள் விரித்த வலையில் தாங்களே மாட்டிக்கொள்வது என்பது கஜேந்திரகுமார் அணிக்குத்தான் பெருந்தும் போலும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ☞ 2

## இலஞ்சக் குற்றச்சாட்டில் இன்பெக்டர் ஒருவர் கைது

வர்த்தகர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய 40 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற முற்பட்ட குற்றச்சாட்டில் ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் (இன்ஸ்பெக்டர்) இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒக்கம்பிட்டிய காமினிபுர பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த வர்த்தகர் ஒக்கம்பிட்டிய பிரதேசத்தில் மணல் வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதாகவும் இதனை இடையூறு இன்றி முன்னெடுத்துச் செல்லவும் மற்றும் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் ☞ 6

### புதிய அரசமைப்பு யோசனைகளில்

## நிறைவேற்றதிகார ஆட்சி முறை வேண்டாம் 17ஆவது திருத்திலுள்ளவற்றை நீக்கக்கூடாது

### சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்து

ஆளும்தரப்பினால் தயாரிக்கப்படவுள்ள புதிய அரசமைப்பில் நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமை நீக்கப்படும் அதேவேளை, அதனூடாக அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்புப் பேரவை, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நிர்வாகத் தீர்ப்பு சபை ஆகிய கட்டமைப்புக்கள் பலவீனப்படுத்தப்படக்கூடாது என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் இயங்கிவரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் ☞ 2

# குழந்தையை அணைத்தபடி பெரியவரின் எலும்புக்கூடு

## செம்மணிப் புதைகுழியிலிருந்து நேற்று மீட்பு இதுவரையில் 115 எலும்புக்கூடுகள் அடையாளம்





02' ஆகிய இரு குழிகளில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இதில் குழி இலக்கம் 01இல் இருந்து சிறியகுழந்தையின்என்புத்தொகுதியை அரவணைத்தபடிஇருந்தபெரியஎன்புத் தொகுதி ஒன்று செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்டிருந்தது. அவை நேற்றுக் காலை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. ☞ 2

## போதைப்பொருள் குற்றங்களுக்காக 7 மாதங்களில் 1.25 லட்சம் பேர் கைது

2025 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரையான காலப்பகுதியில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக 122,913 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி 1 முதல் செவ்வாய்கிழமை வரையான காலப்பகுதியில் 928,787 கிலோ ஹெராயின், 1,396,709 கிலோ ஐஸ், 11,192,823 கிலோ கஞ்சா, 27,836 கிலோ கொக்கெய்ன் மற்றும் 381,428 கிலோ ஹாஷிஷ் ஆகியவை பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு வெள யிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்வதற்காக செயல்படுத்தப்படும் விசேட தேடுதல் நடவடிக்கைகளின் ஒரு ☞ 2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பெறப்பட்ட வாக்குமூலங்கள் குறித்து நீதிமன்றில் ஏன் அறிக்கையில்லை?

### எதிரணி எம்.பி. நிசாம் காரியப்பர் கேள்வி

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் தொடர்பில் 43 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். ஆனால் அந்த வாக்குமூலம் தொடர்பான 'பி' அறிக்கை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்காமலிருப்பதற்குரிய காரணம் என்னவென்பதில் பெரும் சந்தேகம் காணப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அரசுத் தலைவர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

2025.01.07 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் உயிர்த்த ☞ 6

## மாகாண சபைகள் சட்ட திருத்தம் ஆளும்தரப்பும் தனிப் பிரேரணை

### துறைசார் அமைச்சர் தெரிவிப்பு

மாகாணசபைத்தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான யோசனை யொன்றைதாம் ஆளும்தரப்பின் சார்பில் முன்வைப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற சபைகள் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் திருத்தச்சட்டமூலம் தொடர்பான தனிநபர் பிரேரணை ஏற்கனவே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் சாணக்கியனால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தானும் புதிய யோசனையைச் ☞ 6

## கடந்த 3 வருடங்களில் மட்டும் 20,000 மாணவர்கள் இடைவிலகல்

கற்றல் நடவடிக்கைகளிலிருந்து கடந்த 03 வருடங்களில் 20,000 மாணவர்கள் இடைவிலகியுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சர் பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு யோசனைகள் தொடர்பில் மாகாண மற்றும் வலயக் கல்வி அதிகாரிகளை தெள வுபடுத்தும் வடமேல் மாகாணத்திற்கான கலந்துரையாடல் குருணாகல் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் அதிகாரிகளுக்கு தெள வுப்படுத்தும் போதே பிரதமர் இதனை கூறினார்.

நாளாந்தம் பாடசாலை நேரத்தில் 50 வீத ☞ 2

## போர்க் குற்றவாளியான இஸ்ரேலையும் இலவச வீசாவில் உள்வாங்கியது தவறு

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. கண்டனம்

இஸ்ரேல் போர்க குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில் இலங்கை அந்நாட்டுக்கு இலவசமாக விசா வழங்கும் தீர்மானத்தினை எடுத்துள்ளமையானது முற்றிலும் தவறானதாகும். குறித்த தீர்மானம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் உள்ளதென்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் ☞ 2

## கைவிடப்பட்ட அரச கட்டடங்களை பல்கலை விடுதிகளாக்க தீர்மானம்

கைவிடப்பட்டுள்ள அரச கட்டடங்களை பல்கலைக்கழகங்களுக்கான விடுதிகளாகப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தனியார் துறையினருடன் இணைந்து விடுதிக்கான கட்டடங்களை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

அரசால் கைவிடப்பட்டுள்ள ☞ 6

# எம்.பிக்களின் ஓய்வூதிய ரத்துக்கான சட்ட வரைவு விரைவில் வருகிறது

நாடாளுமன்றஉறுப்பினர்களின்ஓய்வூதிய கொடுப்பனவைஇரத்துச்செய்வதுதொடர்பான சட்டவரைவினை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும்நாடாளுமன்றவிவகாரங்கள்அமைச்சு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்வதற்காக சட்டவரைஞர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு நீதியமைச்சினால் பரிசீலிக்கப்பட்டுள்ள நிலையில் இறுதி மீளாய்வுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய கொடுப்பனவை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.இதற்கமைய சட்டவரைஞர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட சட்டவரைவினை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த சட்;டவரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்ததன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலில்சட்டமூலம்பிரசுரிக்கப்படும்.அதன் பின்னர் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த 14 நாட்கள் காலவகாசம் வழங்கப்படும்

## இனி இது .....

சபையில் செப்பெடம்பரில் வரவுள்ள இலங்கை தொடர்பான புதிய தீர்மனத்திற்கு முன்பாக இங்கிருந்து ஒரு கடிதத்தை வரைவது என்றும் அதில் தமிழ் அரசுக் கட்சியும் கையெழுத்திடவேண்டும் என்றும் கஜேந்திரகுமார் அணி தொடங்கிய முயற்சி இப்போது அதற்கெதிராகவே வந்து நிற்கின்றது.

தமது முயற்சியைத்திரித்து, தமக்கெதிராகச் சதி செய்கிறார்கள் என்று கதறிக் கதறி அழும் நிலமைக்குஇந்தக்கடிதத்தயாரிப்புஅணியினர் இன்றைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் சொல்லப்போனால், இதற்கு முன்னர் அவர்கள் தமிழ் அரசுக் கட்சியினரை நோக்கி முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் எல்லாம் இப்போது அவர்களின் முன்னாள் சகாக்களும் இன்நாள் எதிரிகளுமாகியுள்ளவர்களால் அவர்களுக்குஎதிராகவேவைக்கப்படுகின்றன. இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால், கஜேந்திரகுமார் வேறு சுமந்திரன் வேறு இல்லை என்ற அளவிற்கு இந்த விமர்சனம் இன்று தீவிரம் பெற்றுள்ளது.

தமிழ்அரசுக்கட்சியையும்சுமந்திரனையும் இலக்கு வைத்துத்தான் கஜேந்திரகுமாரின் அரசியலே நகர்ந்து வந்திருக்கிறது. அதாவது, சுமந்திரனுக்கு எதிர்த் திசையில் பயணிப்பதுதான் தமது அரசியல் என்பதைத்தான் கடந்த பொதுத் தேர்தல் வரையிலும் கஜேந்திரகுமாரும் அவரது அணியினரும் முன்வைத்தனர். இப்போதோ கஜேந்திரகுமாரே சுமந்திரனின் தடத்தில்தான் பயணிக்கிறார் என்று அவரது முன்னாள் சகாக்களே விமர்சித்துத் தள்ளுக்கிறார்கள். வினை விதைப்பவன் வினை அறுப்பான் என்று இதைத்தான் சொல்லுகிறார்களோ!

இப்போதைக்குப்பிரச்சினைஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்து வரவுள்ளதீர்மானத்தைஎப்படிவடிவமைப்பது என்பது தொடர்பில் ஒரு கோரிக்கையை முன்வைப்பதுதொடர்பிலானதுதான்.தமிழர்கள் சார்பில் வைக்கப்படவேண்டிய இந்தக் கோரிக்கையில் கஜேந்திரகுமார் தரப்பினர் இப்போது தமிழ் இனப்படுகொலையை முதன்மைப்படுத்துகிறார்கள் இல்லை என்பதே குற்றச்சாட்டு. இது இன்று நேற்று ஏற்பட்ட பிரச்சினையல்ல. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைக்கும் நாடுகள் எடுக்கும்நிலைப்பாட்டுக்கும்மனிதஉரிமைகள் பேரவைக்குள்ளேயே அங்கிருக்கும் இராஜதந்திரிகள் எடுக்கும் நிலைப்பாட்டுக்கும் தமிழர்களின் எதிர்பார்ப்புக்கும் இடையிலான வேறுபாடு சார்ந்தது இந்தப் பிரச்சினை.

இலங்கையில்நடந்தது இனப்படுகொலை என்று ஏற்றுக்கொள்கின்ற நிலையில் தீர்மானத்தை ஆதரிக்கும் மேற்குலக நாடுகள் இப்போதைக்கு இல்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள்ளேயே இருப்பவர்களும் அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். அதனால்தான் அவர்களது அறிக்கைகளில் இனப்படுகொலை என்ற வார்த்தையைஅவர்கள்பயன்படுத்துவதில்லை. மறுபுறத்தில், இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று நிரூபித்துவிட்டால் வெளியக சுயநிர்ணய உரிமையைத் தமிழர்கள் பயன்படுத்துவதற்கான உலக அங்கீகாரத்தைப் பெற்றுவிடலாம் என்பது தமிழர் தரப்பினரின் எதிர்பார்ப்பு. இந்த யதார்த்தத்தையே கஜேந்திரகுமார் தரப்பு இதுவரையிலும் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான அரசியலாகப் பயன்படுத்தி வந்தது.

இலங்கைத்தீர்மானத்தை முன்வைக்கும் இணைஅனுசரணைநாடுகளின்நலன்களுக்கு ஏற்ப தமிழ் அரசுக் கட்சி செயற்படுகின்றது, அனுசரணை நாடுகளின் நலன்கள் என்பது இலங்கை அரசின் நலன்கள் சார்ந்தவை. எனவே தமிழ் அரசுக் கட்சியும் இலங்கை அரசு மற்றும் ஆட்சியாளர்களின் நலன் சார்ந்தே செயற்படுகின்றது, அதனால் தமிழ் அரசுக் கட்சி இலங்கை அரசின் முகவர், இந்த முகவர் தொழிலுக்கு சுமந்திரரே மூலகர்த்தர் என்றெல்லாம்தான் கஜேந்திரகுமார் இதுவரையில் கூறிவந்தார். இப்போது ஐ.நாவுக்குக் கடிதம் எழுதும் விவகாரத்தில் அவரே அனுசரணை நாடுகளின் நலன்களோடு ஒத்துப்போய், ஒத்தூதித்தான் இனப்படுகொலை என்பதை கடிதத்தில்முதலாவதாகக்குறிப்பிடுகிறார்என்று அவரைக் கடுமையாகச் சகட்டுமேனிக்கு விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள்.

இப்படித்தான் தான் விரித்த வலையில் தானேமாட்டிக்கொண்டுள்ளார்கஜேந்திரகுமார். கடைசியில் எப்படியும் 2021இல் ஐ.நாவுக்கு எழுதிய கடிதத்தை ஒத்த ஒரு கடிதத்தையே தயாரிப்பார்கள் என்பது வேறுவிடயம். அந்தக் கடிதத்தில் இனப்படுகொலை முதலிடத்தில் போடப்பட்டிருந்தது. அதில்தமிழ்அரசுக்கட்சியும் கையெழுத்திட்டது. அப்போது அந்தக்கடிதத்தில் இனப்படுகொலையை முதலிடத்தில்போட சுமந்திரன் சம்மதிக்கவில்லை என்றும் பின்னர் நீங்கள் எல்லோரும் சொல்வதால் ஏதோ இணங்குகின்றேன் என்று அவரும் ஒத்துக்கொண்டார்என்றும்விமர்சிக்கப்பட்டது. இன்று அதே விமர்சனம் கஜேந்திருகுமாருக்கு எதிராக வந்து நிற்கின்றது.

இதற்கிடையில் இந்தக் கடித விவகாரம் குறித்து இந்த வாரம் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு கூடி ஆராயவுள்ளது. அதன் முடிவுகளுக்குப் பின்னர்தான் கஜேந்திரகுமாருக்கு எதிரான கடுமையான விமர்சனங்களில் இருந்து அவர் பிணையெடுக்கப்படுவாரா இல்லையா என்பது தெரியவரும்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## குழந்தையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருகுழிகளிலும்நேற்றுமேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது புதிதாக நான்கு மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன. இதன் மூலம் செம்மணிப் புதைகுழியில் அடையாளம்காணப்பட்டஎன்புத்தொகுதிகளின் எண்ணிக்கை 115 ஆக அதிகரித்துள்ளது.

சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பானஇரண்டாம்கட்டஅகழ்வுப்பணிகள் 25ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது.

இதில் நான்கு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. அவற்றில் மூன்று மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டன. இதுவரை 102 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நீதிவான் ஆனந்தராஜாவின் கண்காணிப்பில்துறைசார்நிபுணர்பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக் குழுவின் சட்டத்தரணி பூரணி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் தலைமையிலான குழுவினரும், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்களும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர்.

## போதைப்பொருள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியாக செவ்வாய்க்கிழமை முழுவதும் மேலும் பல சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கைக்காக இலங்கை பொலிஸ்,பொலிஸ்விசேடஅதிரடிப்படைமற்றும் முப்படைகள் இணைந்துக்கொண்டுள்ளன.

சோதனை நடவடிக்கையின் போது, 25,111 பேர் சோதனை செய்யப்பட்டனர். மேலும் 7,734 மோட்டார் சைக்கிள்கள் உட்பட 10,128 வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதன்படி, இந்த நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றங்களுக்காக 948 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சோதனைகளின் போது குற்றங்களில் நேரடியாக ஈடுபட்டதாக அடையாளம் காணப்பட்ட 13 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு,இந்தசோதனைநடவடிக்கையின் போது மூன்று சட்டவிரோத துப்பாக்கிகளும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்காக பொலிஸ் அதிகாரிகள், விசேட அதிரடிப்படை மற்றும் முப்படை உறுப்பினர்கள் உட்பட 6,695இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் பங்கேற்றுள்ளனர்.

## நிறைவேற்றதிகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆளும்தரப்பு கவனம் செலுத்தியிருப்பதாக பிரதமர் வெளியிட்டுள்ள கருத்தைப் பெரிதும் வரவேற்கிறோம். புதிய அரசமைப்பைத் தயாரிப்பதாகவும், அதனூடாக நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமையை நீக்குவதாகவும் அரசுத் தலைவர்த்தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களின்போது ஆளும்தரப்பு அளித்த வாக்குறுதியின்மீது நம்பிக்கை வைத்தே இக்கருத்தை வெளியிடுகிறோம்.

அந்த வாக்குறுதியில் இருந்து பின்வாங்காமல் ஆளும்தரப்பு அதனை நிறைவேற்றும் என ஒட்டுமொத்த நாடும் எதிர்பார்த்திருப்பதுடன் பிரதமரின் கருத்தை அதற்கான ஆரம்பமாகவேநாம்கருதுகிறோம்.

அதற்கமைய 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இயங்கிய அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளைத் திரட்டும் குழுவினால் நாடளாவிய ரீதியில் சகல பகுதிகளையும் உள்வாங்கிபொதுமக்களிடமிருந்துதிரட்டப்பட்ட யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அரசாங்கத்தைவலியுறுத்துகிறோம். அப்போது அந்நடவடிக்கைக்கு தலைமைத்துவம் வழங்கியவர் இப்போது தேசிய மக்கள் சக்தியின்சிரேஷ்டஉறுப்பின்களில்ஒருவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்க ஆவார். எனவே அந்த யோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் ஊடாக புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளுக்காக செலவிடப்படக்கூடிய நேரம் மற்றும் நிதியின் அளவைக் குறைத்துக்கொள்ளவும், ஒட்டுமொத்த நாட்டுமக்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் நம்பிக்கையை வென்றெடுக்கவும் முடியும்.

அதேவேளை புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போதோ அல்லது அதற்கு முன்னதாகக் கொண்டுவரப்படக்கூடிய அரசமைப்புத் திருத்தத்தின்போதோ அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்புப்பேரவை, சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் நிர்வாக தீர்ப்பு சபை ஆகிய கட்டமைப்புக்களை பலவீனப்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கக்கூடாது.

அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும், அவர் தலைமைத்துவம் வழங்கும் ஜேவிபியும் அரசமைப்புக்கான 17ஆவதுதிருத்தத்தைக்கொண்டுவருவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றியமையையும், இவ்விடயத்தில் அவர்கள் கொண்டிருக்கும் நிலைப்பாட்டையும்பெரிதும்வரவேற்கிறோம். எனவே அத்திருத்தத்தின் ஊடாக கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அரசியல் கலாசாரத்தை எதிர்வருங்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் எவ்வகையிலும் பின்தள்ளுவதற்கு இடமளிக்கக்கூடாது என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கடந்த 3....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களேவகுப்பறையில்இருப்பதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த வருடத்தில் தரம் ஒன்றுக்கும் தரம் 6க்கும் புதிய பாடவிதானங்களை அறிமுகப்படுத்துவதாகவும் இதன்மூலம் புதிய இலக்குகளை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் துறைசார் அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டார்.

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்திஅலுவலகத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்காக மேலும் 40 நாடுகளுக்கு இலவச விசாவை வழங்குவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. இவ்வாறானதீர்மானத்தை எடுத்தமைக்கு பதிலாக வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வந்ததன் பின்னர் விசா பெறும் நடைமுறையை செயற்படுத்தியிருந்தால் ஒரு சுற்றுலாப் பயணியிடமிருந்து விசா கட்டணமாகக் குறைந்தது 10 டொலரைப் பெற்றிருக்கலாம். அவ்வாறான மாற்று வழிகள் குறித்துச் சிந்திக்காது எடுத்தவுடன் 40 நாடுகளுக்கு இலவச விசா வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாதுறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்என்பதில்மாற்றுக்கருத்து இல்லை. விசாவுக்கான ஆவணங்களுக்கேனும் 10 டொலரையாவது அறவிடாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதே எமது பிரச்சினையாகும். இந்த தீர்மானத்தால் ஆளும்தரப்புக்குக் கிடைக்கும் பெரும் தொகையிலான அந்நிய செலாவணி வருமானம் இழக்கப்படுகிறது.

இஸ்ரேலுக்கும் இலவச விசாவை வழங்குவதற்குஆளும்தரப்புதீர்மானித்துள்ளது. எந்த அடிப்படையில் இஸ்ரேலுக்கும் இலவச விசா வழங்க தீர்மானிக்கப்பட்டது. இஸ்ரேல் முன்னெடுக்கும் இனப்படுகொலைக்கு எதிராக பலம் மிக்க நாடுகள்கூடக் குரல் கொடுத்து வருகின்றன. இந்தக் காரணியை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளுக்கிடையில்பிளவும்காணப்படுகிறது. ஆசிய மற்றும் தென் அமெரிக்க நாடுகள் இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாடுகளையே கொண்டுள்ளன.

அண்மைய நாட்களாக ஐரோப்பிய நாடுகளும்இஸ்ரேலுக்குஎதிராகவேசெயற்பட்டு வருகின்றன. இஸ்ரேல் படுகொலையில் ஈடுபடுகின்றது என்பதை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கையும்இதற்குமுன்னர் இஸ்ரேலுக்கு எதிராக செயல்பட்டதற்கும் பலஸ்தீனுக்குஆதரவாகசெயல்பட்டதற்குமான வரலாறு காணப்படுகிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ச ஆட்சி வரை பலஸ்தீனுக்கு ஆதரவான பலஸ்தீன் சுதந்திரத்திற்கு ஆதரவான வெளிநாட்டு கொள்கைகளையே இலங்கை ஆளும்தரப்பு பின்பற்றி வருகிறது.

பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் சிக்கியிருந்து விடுதலைக்காக போராடிய மூன்றாம்உலகநாடுகள்என்றஅடிப்படையில் இலங்கையும் பலஸ்தீனின் சுதந்திரத்துக்காக குரல் கொடுத்துள்ளது. ஆனால் தம்மை முற்போக்கு வாதிகள் எனக் கூறிக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி இஸ்ரேலுக்கு ஆதரவாக செயல்படும் வெளிநாட்டு கொள்கையை பின்பற்றிக் கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பலஸ்தீனுக்காக குரல் கொடுத்த பெரும் அரசியல் சக்தியாக இவர்கள் காணப்பட்டனர்.

பாலஸ்தீன்சுதந்திரத்துக்காகஇலங்கையில் உள்ள அமெரிக்க தூதரத்துக்கு முன்னதாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டு இருக்கின்றனர். தேர்தலுக்கு முன்னர் இரு சந்தர்ப்பங்களில் பலஸ்தீன் தூதரகத்துக்குச் சென்று அரசுத் தலைவர் அநுரகுமார் திஸாநாயக்க, அவர்களின் சுதந்திரத்திற்காக ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இஸ்ரேலின் நடவடிக்கைகளால் பலஸ்தீனுக்கு உணவு செல்வது கூட தடுத்து வைக்க தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் பலஸ்தீனில் மந்த போசணை அதிகரித்து குழந்தைகள் உயிரிழந்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு

தொடர்ச்சி 6ம் பக்கம்....

புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை



தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அணு மின் நிலையம் இலங்கைக்கு அவசியமா?

**இலங்கையில் அணு மின் நிலையம் அமைப்பது தொடர்பான அரசு நடவடிக்கைகள் அண்மையில் தீவிரமடைந்து வருகின்றன. ஏற்கனவே ஐந்து இடங்கள் இதில் பொருத்தமானவையாக இருப்பதைக் கண்டறியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசுத் தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த முயற்சிக்கு அடிப்படை தருவது, அதிகரித்துவரும் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அணுமின் நிலையம் அமைக்கப்படவேண்டும் என்பது முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனை. ஆனால், இது இலங்கையின் நிலைப்பாட்டுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பொருந்தக்கூடிய தீர்வா என்பது மிக முக்கியமான கேள்வியாக எழுகிறது.**

**அணு மின் நிலையம் என்பது மிகுந்த பாதுகாப்புத் தேவையுடன்கூடிய, அநேக உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய பேராபத்துகளைத் தழுவிக்கொள்ளும் ஒரு அபிவிருத்தி திட்டமாகவே பார்க்கப்படுகிறது. ஜப்பானின் புகழ்பெற்ற ஃபுகுஷிமா அணு மின் நிலையத்தில் இயற்கை பேரழிவால் உருவான விபத்தில் எப்படி மாறியதென்று உலகமே பார்த்துள்ளது. இந்நிலையில், இலங்கை போன்று புவிசார் மாற்றங்களால் இலகுவாக பாதிக்கக்கூடிய, சிறிய பரப்பளவுடைய ஒரு தீவு நாடு, இவ்வளவு பெரிய அபாயத்திற்குள்ளான திட்டத்தை ஏற்க வேண்டுமா என்பது சிந்திக்க வேண்டியதே.**

**இலங்கையில் சூரிய ஒளி மிகுந்த அளவில் கிடைக்கக்கூடிய நாட்களும், நேரங்களும் அதிகம் உள்ளன. சூரிய ஒளி மூலமான மின்சார உற்பத்தி (solar power) மிகவும் குறைந்த முதலீட்டில், நீண்ட காலம் பயனளிக்கக்கூடியதாக இருக்கிறது. தற்போதைய இலங்கை மின்சார சபையின் கட்டமைப்புகள் இதனை முழுமையாக ஆதரிக்காத போதிலும், தேவையான மாற்றங்களை மேற்கொண்டு சூரிய ஒளி மூலமான மின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஊக்குவிப்பு வழங்கப்படும் பட்சத்தில், தனியார் முதலீட்டாளர்களும் இத்துறையில் ஈடுபடத் தயாராக இருக்கிறார்கள்.**

**இதனுடன் சேர்த்து, கடலோரங்களில் காற்றாலைகள் அமைப்பது மற்றும் கடல் அலைகள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதும் வழமைக்குள் கொண்டு வரக்கூடிய வாய்ப்புகளாகவே உள்ளன. மேலும், இயற்கை வளங்களின் மீதான சார்பு, சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் வளர்ச்சிக்கான வழிகளை இவை காட்டும். இரவு நேர மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய புதிய உயர் திறன் கொண்ட சேமிப்பு (battery storage) தொழில்நுட்பங்கள் உலகளவில் கிடைக்கின்றன. அவற்றையும் இலங்கை தன் திட்டங்களில் இணைத்துக்கொள்வதன் மூலம், அணு மின் நிலையம் தேவையற்ற ஒன்றாக மாறிவிடும்.**

**அணு மின் நிலையம் அமைப்பதற்கான முதலீட்டுச் செலவுகள் பல பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும். ஒரு பொருளாதார நெருக்கடியைப் சந்தித்து வரும் நாடாக, இவ்வளவு பேராசையை எதற்காக நாடவேண்டும் என்பது விளக்கத்துக்குரியதாகும். அதே நேரத்தில், பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் செலவுகளும் ஆண்டு தோறும் அதிகமாகவே இருக்கும்.**

**முன்னோக்கான பார்வையுடன் செயற்பட விரும்பும் அரசுக்கு, தன்னிறைவு மின்சாரத் தயாரிப்புக்கான திட்டங்கள் அதேசமயம் சுற்றுச்சூழலுக்கு நட்பாகவும் இருக்க வேண்டும். நவீன, பாதுகாப்பான, குறைந்த செலவிலான, நிலையான தொழில்நுட்பங்களைத் தேடி முன்னேறுவதற்கான நேரம் இது. அணு மின் நிலையம் இலங்கைக்கு ஒரு தீர்வாக அல்ல; அது ஒரு புதிய பிரச்சனைகளின் கதவாக மட்டுமே இருக்க முடியும்.**

## முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கில் நேற்று விசாரணை

சதொச நிறுவனத்தின் ஊழியர்களை அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளில் இருந்து விடுவித்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் ஆளும்தரப்பிற்கு நட்டத்தை ஏற்படுத்தினார் என்று முன்னாள் வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூன்று பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, முறைப்பாட்டாளர் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேராவின் வழிகாட்டுதலின் கீழ், சதோச நிதி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிமேஷா சஞ்சீவனி அளித்த சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னர், மேலதிக வழக்கு விசாரணையை ஒக்டோபர் 16ஆம் திகதி வரை நீதிபதி ஒத்திவைத்தார்.

2010 முதல் 2014 வரையிலான காலப்பகுதியில் வர்த்தக அமைச்சராகப் பணியாற்றியபோது, சதொச நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்களை அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளில் இருந்து விடுவித்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் மூலம் ஆளும்தரப்பிற்கு நட்டத்தை ஏற்படுத்தி, ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் 'ஊழல்' எனப்படும் குற்றத்தைப் புரிந்ததாக குற்றஞ்சாட்டி, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சதொசவின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் அதன் முன்னாள் செயற்பாட்டு பணிப்பாளரான மொஹமட் சாகீர் ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் துருக்கி ஆயுதக் கண்காட்சியில்

உலகின் முதன்மையான பாதுகாப்பு கண்காட்சிகளில் ஒன்றான ஐ.டி.ஈ.எப். என்ற 17ஆவது சர்வதேச பாதுகாப்பு தொழில் கண்காட்சி, துருக்கி குடியரசின் அரசுத் தலைவரின் அனுசரணையுடன், துருக்கி தேசிய பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்டு, துருக்கி ஆயுதப்படைகளினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு, அதிநவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்துவதற்கும் பாதுகாப்புத் துறையில் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் ஒரு உலகளாவிய தளத்தை உருவாக்கியுள்ளது. இந்த கண்காட்சி, ஜூலை 22 முதல் 27 வரை இஸ்தான்புல் எக்ஸ்போ மையத்தில் நடைபெற்றது.

துருக்கியின் தேசிய பாதுகாப்பு பிரதி அமைச்சர் பிலால் துர்தாலியின் அழைப்பின் பேரில் அந்நாட்டிக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட இலங்கையின் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு), தனது இந்த பயணத்தின்போது துருக்கியின் பல மூத்த பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் கலந்தரையாடலில் ஈடுபட்டார்.

இதற்கமைய துருக்கியின் தேசிய பாதுகாப்பு பிரதி அமைச்சர்களான பிலால் துர்தாலி மற்றும் மூசா ஹெய்பெட், துருக்கிய தரைப்படைகளின் தளபதி ஜெனரல் செல்சுக் பைரக்தரோக்லு, கடற்படைத்தளபதி அட்மிரல் எர்குமெண்ட் டாட்லியோக்லு மற்றும் விமானப்படைத் தளபதி ஏர் ஜெனரல் ஜியா செமல் கடியோக்லு ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வதில் இருதரப்பு பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டன. கூட்டுறவு முயற்சிகள் மூலம் பரஸ்பர உறவுகளை வலுப்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டையும் இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

## 'எல்ஸா த்ரீ' கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கான இழப்பீட்டை தர இணக்கம்

இந்தியாவின் கேரள கடற்பிராந்தியத்தில் 'எல்ஸா த்ரீ' கப்பல் விபத்துக்குள்ளானமையினால் இலங்கையின் கடற்சார் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டை வழங்க கப்பல் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

லைபீரிய கொடியுடன் பயணித்த எம்.எஸ்.சி எல்சா சரக்கு கப்பல் கடந்த மே 25 ஆம் திகதி தீப்பற்றி விபத்துக்குள்ளானது.

இந்நிலையில் எல்ஸா த்ரீ கப்பல் நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் காப்புறுதி நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் சந்தித்து கலந்துரையாடியதாக அதன் தலைவர் சமந்த குணசேகர தெரிவித்தார்.

கப்பல் விபத்தினால் நாட்டின் கடற்பிராந்தியந்தியங்களுக்கு ஏற்பட்ட சேதம் மதிப்பிடப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் விமானப்படை, கடற்படை மற்றும் இராணுவத்தினர் இணைந்து கடற்கரைகளை துப்புரவு செய்யும்பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

# ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ வழக்குக்கு சிங்கப்பூரில் என்ன நடந்தது?

## முன்னாள் சுற்றாடல்துறை அமைச்சர் கேள்வி

கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குக்கு என்ன நேர்ந்தது என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும். இந்த கப்பல் விபத்துக்கு நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கு ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கை என்னவென்று முன்னாள் சுற்றாடற்றுறை அமைச்சர் அஜித் மான்னபெரும கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் உயர் நீதிமன்றம் சிறந்த தீர்ப்பினை வழங்கியுள்ளது. இந்தக் கப்பல் 2021.05.21 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் தீ விபத்துக்குள்ளாகியது.

சிங்கப்பூர் நாட்டுக்கு சொந்தமான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்கு கப்பலில் ஏற்பட்ட திரவக் கசிவு காரணமாக இந்த கப்பல் கட்டார் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரியிருந்தது. இருப்பினும் அந்த நாடுகளின் துறைமுக அதிகாரிகள் அதற்கு அனுமதியளிக்கவில்லை.

நைற்றஜன் அமில கசிவுக்கு உள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் 17.6 கிலோமீற்றர் அப்பாற்பட்ட பகுதியில் நங்கூரமிட்டது. இந்த கப்பல் 2021.05.21 ஆம் திகதியன்று முழுமையாக தீ விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்து தொடர்பில் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த கப்பல் விபத்தால் இலங்கையி;ன் பொருளாதாரத்துக்குபாரியதொருபாதிப்பு ஏற்பட்டது. மீனவர்களின் வாழ்வாதாரமும், கடல்வாழ் உயிரினங்களின் வாழ்நிலையும் பாதிக்கப்பட்டன. சிங்கப்பூர் கப்பல் நிறுவனத்துக்கு எதிராக இலங்கையில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று துறைசார் மேற்பார்வை குழுவில் முன்னிலையான பல்வேறு தரப்பினர்கள் குறிப்பிட்ட நிலையில் ஆளும்தரப்பு அதனை கவனத்திற் கொள்ளாமல் சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடர்பில் உயர்நீதிமன்றம் சிறந்த தீர்ப்பினை வழங்கியுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குக்கு என்ன நேர்ந்தது என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும். இந்த கப்பல் விபத்துக்கு நட்டஈடுபெற்றுக்கொள்வதற்குஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கை என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.




## அம்பாந்தோட்டை சரணாலய உரிமையாளருக்குப் பிணை

சட்டவிரோதமான முறையில் அதி சொகுசு மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அம்பாந்தோட்டை பறவைகள் சரணாலயத்தின் உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று அம்பாந்தோட்டை நீதிவான்நீதிமன்றில்முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை 2 இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய மத்திய குற்ற விசாரணப்பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கமல் ஆரியவங்ச தலைமையிலான பொலிஸ் குழுவொன்று அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகரவெ பிரதேசத்தில் அண்மையில் விசேட தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டிருந்தது.

இதன்போது நாகரவெ பறவைகள் சரணாலய வளாகத்தின் உணவு களஞ்சியசாலையில் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிநவீன ரக 21 மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டிருந்தன.

ஒரு மோட்டார் சைக்கிள் ஒன்றின் பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம் எனவும் 25 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான மோட்டார் சைக்கிள்கள் இதன்போது மீட்டிக்கப்பட்டிருந்தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த சரணாலயத்தின் முகாமையாளர் மற்றும் களஞ்சியாலையின் கட்டுப்பாட்டாளரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே குறித்த சரணாலயத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பில் மத்திய குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் அம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன.

சர்வதேசகுற்றவியல்நீதிமன்றம்இஸ்ரேல் யுத்த குற்றம் புரிந்துள்ளதாக அறிவித்துள்ளது. இவ்வாறான பின்னணிக்கு மத்தியிலும் இஸ்ரேலுக்குஇலவசவிசாவைவழங்குவதற்கு வெட்கமின்றி இந்த ஆளும்தரப்பு எந்த அடிப்படையில்தீர்மானித்தது?இதுஎவ்வாறான வெளிநாட்டு கொள்கை? இது எவ்வாறு அணிசேரா கொள்கையாகும்?

யுத்தக் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டோருக்கும் இந்நாட்டுக்கு வருவதற்கு இலவச விசா வழங்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு அநுரகுமார திஸாநாயக்கவின் ஆட்சியில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை அரசாங்கமே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகிறது.

எந்தவொரு மதிப்பீடும் இன்றி ஆளும்தரப்புஇவ்வாறானதொருபாரதூரமான தீர்மானத்தைஎடுத்துள்ளது. இதனால்ஏற்படும் பாதிப்புக்களுக்குஅநுரகுமாரவின்அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

## பெறப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்றஅலுவல்கள்அமைச்சர்ஆனந்த விஜேபாலவிடம் கேள்வியெழுப்படுகிறது.

35882 -24 இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.43 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்டதைகாட்டிலும்விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது என்று அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்திருந்தார்.

இந்த வழக்குடன் தொடர்புடைய 'பி'அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நான் முயற்சித்தேன்.இருப்பினும் என்னால் அந்த அறிக்கையை ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை. சுரேஷ் சாலியின் சட்டத்தரணியும் இந்த 'பி' அறிக்கையை பெற்றுக்கொள்ள கோரியிருந்தார்.

அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டதற்கமைய 43 பேரின் வாக்குமூலத்தின் சாரம்சம் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். தண்டனைச் சட்டக்கோவையின் 115 ஆவது பிரிவின் பிரகாரம் ஏதேனும் 'பி' அறிக்கையை சமர்ப்பித்ததன்பின்னர்அந்தவிசாரணையின் முன்னேற்றத்தை விசாரணை அதிகாரிகள் நீதிவானுக்குசமர்ப்பிக்கவேண்டும்.இருப்பினும் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தின் சாராம்சம் நீதிவானுக்குமுன்னிலைப்படுத்தப்படவில்லை.

43 பேரின் வாக்குமூலத்தை பதிவு செய்து விட்டு ஏன் அவற்றை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை என்ற பிரச்சினை காணப்படுகிறது.இதில்காணப்படும்இரகசியம் என்னவென்பதை அறிய முடியவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நான் வெளிப்படுத்திய விடயங்கள் குறித்து ஆளும்தரப்பு எவ்வித அவதானமும் செலுத்தவில்லை.அலட்சியப்படுத்தும் போக்கில் செயற்படுகிறது என்றார்.

## இலஞ்சக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் இருந்து உழவு இயந்திரம் மூலம் களஞ்சியப்படுத்தி வைக்கும் பகுதிக்கு எடுத்துச்செல்லும்வரைசட்டரீதியாகஎந்தவொரு இடையூறு ஏற்படுத்தமால் இருக்கவும்

சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் மாதாந்தம்50ஆயிரம்ரூபாவைஇலஞ்சமாகக் கோரியுள்ளார்.

இதற்கமைய சந்தேகநபர் குறித்த வர்த்தகரிடமிருந்து பல சந்தர்ப்பங்களில் 47 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் புதிய வீடொன்றை நிர்மாணித்து வருகிறார் என்றும் இதற்கு மணல் 3 கியூப் தேவைப்படுவதாகவும் தெரிவித்து அதன் பெறுமதியான 45 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக கோரியுள்ளார் என்றும் விசாரணைகளில்வெளிக்கொணரப்பட்டுள்ளது.

அதில் 40 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொள்ள முற்பட்டபோது சந்தேகநபர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணி அளவில் மாளிகாவில-மொனராகலைபிரதான வீதியின் வீரகஸ் சந்தியில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கைவிடப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டடங்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதாக அவர் கூறினார்.

அத்துடன், பல்கலைக்கழகங்களிலிருந்து தூரப்பகுதிகளில் காணப்படும் விடுதிகளுக்கான போக்குவரத்து திட்டங்களை துறைசார் அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்துவருவதாகவும் கல்வி பிரதியமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன மேலும் குறிப்பிட்டார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்போவதாகஅமைச்சர்தெரிவித்தார்.

சாணக்கியன் ஏற்கனவே சமர்ப்பித்துள்ள பிரேரணை, 2019 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணைகளின் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கின்றது. சுமந்திரனின் பிரேரணை இரண்டு தடவைகளும் விவாதிக்கப்பட்டு மூன்றாவது வாசிப்பில் நிறைவேற்றப்படும்எல்லைவரைசென்றிருந்த். அதனால் இப்போதைய சாணக்கியனின் பிரேரணையை மீண்டும் விவாதத்திற்கு எடுக்கவேண்டிய அவசியமில்லை என்றும், ஆகவே அதனை நாடாளுமன்றத்தில் உடனடியாகநிறைவேற்றுவதற்குஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற சபைகள் அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தின்போது மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பில் தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட தனிநபர் பிரேரணை குறித்து எதிர்ப்பு வெளியிடவேண்டிய அவசியமில்லை எனவும், மாறாக அதற்கான அங்கீகாரத்தை விரைந்து வழங்குமாறும் அமைச்சர் சந்தன அபேரத்னவிடம்சாணக்கியன்வலியுறுத்தினார்.

அதற்குப்பதிலளித்தஅமைச்சர்,அத்தனிநபர் பிரேரணைகுறித்துஆராய்ந்துவருவதாகவும், இவ்விடயம்தொடர்பில்ஆளும்தரப்பின்சார்பில் பிரேரணையொன்றை முன்வைப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2025இல் வெளியிடப்பெற்றது